# செய்யாற்று குடிநீரை கொண்டு வருவது குறித்து மாத்தூர் ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் தீர்மானம்



**காஞ்சிபுரம், மார்ச் 24 -**
பெருநகர் வழியாக செல்லும் செய்யாற்று குடிநீரை, மாத்தூர் ஊராட்சிக்கு கொண்டு வருவது குறித்து சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு வெண்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மாத்தூர் ஊராட்சியில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் தலைவர் த. லட்சுமி தமிழரசன் (எ) பாபு தலைமையில் நடந்து. ஊராட்சி துணைத் தலைவர் கமலக்கண்ணன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: மாத்தூர் ஊராட்சியில் (ஆர்.ஓ.,) நான்கு நிலைகளை கொண்ட சுத்திகரிகப்பட்ட குடிநீர் மூன்று இடங்களில் வழங்கப்பட்டு வருகிறது. மக்களுக்கு இந்த குடிநீர் போதிய அளவு நிறைவு செய்ய வில்லை. தற்போது, கோடைக்காலம் நெருங்கிக் கொண்டு வருவதால், ஊராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகலாம். எனவே, இதைக் கருத்தில் கொண்டு மாத்தூர் ஊராட்சிக்கு செய்யாற்று குடிநீர் கொண்டு வர வேண்டும்.இதற்காக மாத்தூரில் தரைதள குடிநீர் தொட்டியும் ஏற்கனவே கட்டப்பட்டு தயார் நிலையில் உள்ளன. செய்யாற்று குடிநீர் மாத்தூருக்கு கொண்டுவர இன்னும் 60 சதவீதம் பணிகளை செய்து முடித்தால், தண்ணீர் மாத்தூரை வந்தடையும். இந்த குடிநீர் பெருநகர் பெய்யாற்றில் இருந்து நெமிலி, உக்கம் பெரும் பாக்கம், வடக்கு மேடு ஆகிய கிராமங்கள் வழியாக கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. கிராமப்புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். புதிய வீடு வழங்க வேண்டும் என, மனுக்களை கொடுத்துள்ள பயனாளிகள் பட்டா - சிட்டா உள்ளிட்ட ஆவணங்களுடன் இணையதள மூலமாக பதிவும் செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் கிராம சபையில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் இல்லம் தேடிக் கல்வி உள்ளிட்ட அரசின் புதிய திட்டங்கள் குறித்து மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. கூட்டத்தில் வார்டு உறுப்பினர்கள் புனிதா, சு.லட்சுமி, சுரேஷ், பாபு மற்றும் பொது மக்கள் என, 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஊராட்சி செயலர் சீனிவாசன் தீர்மானங்களை வாசித்தார்.

# சென்னை மணலியில் மழலையர் பள்ளி ஆண்டு விழா பரிசளிப்பு



**திருவொற்றியூர் மார்ச். 24**
மணலியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி மணலி கைரளி கல்வி அறக்கட்டளையைச் சார்ந்தது. இப்பள்ளியின் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாக புழல் ஒன்றிய ஆசிரியப் பயிற்றுநர் ஆ.ராம்குமார் டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் ச.சற்குருநாதன் அத்திக் குழுவின் நிறுவனர் வானவன் மற்றும் அத்தியின் தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முன்னதாக தலைமை உரையினை பள்ளியின் தாளாளர் கே.சத்யபாலன் வரவேற்புரையை பள்ளியின் தலைமை ஆசிரியர் ச.சக்தி வேல் ஆகியோர் வழங்கினார்கள். பல்வேறு போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு செயலாளர் முகுந்தன் பொருளாளர் ரா.தீவதாஸ் கைரளி நலம் மற்றும் பண்பாட்டுக் கழகச் செயலாளர் கே.ரவீந்திரன் பரிசுகளை வழங்கினார்கள். பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.

இவ்விழாவில் மாநில அளவில் நடைபெற்ற கராத்தே போட்டியில் கோப்பைகளை வென்ற மாணவர்களுக்கு சிறப்புகள் செய்யப்பட்டது. இவ்விழாவிற்கு பெருவாரியான பெற்றோர்களும் வருகை சிறப்பித்தார்கள்.

# நீர்நிலைகளை காப்பதில் மாணவர்களின் பங்கு அவசியமானது: எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக கருத்தரங்கில் வலியுறுத்தல்




**சென்னை மார்ச் 24-**
நீர்நிலைகளை காப்பதில் மாணவர்களின் பங்கு அவசியமானது என எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலக தண்ணீர் தின கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

சென்னை இராமாபுரம் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், கட்டுமானத்தொழில் அகாடமி இணைந்து உலக தண்ணீர் தின கருத்தரங்கை பல்கலைக்கழக கூட்ட அரங்கில் நடத்தினர். கருத்தரங்கில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற தலைமை பொறியாளர் குமார், கட்டடக்கலை வல்லுனர் செந்தில்குமார், கட்டுமான வல்லுனர் அகிலன், எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழக சுற்றுச்சூழல் கட்டடக்கலைத்தலைவர் உமாராமநாதன், துணைத்தலைவர் லோகேஷ், பேராசிரியர் ரமேஷ், கட்டுமாத்தொழில் அகாடமி தலைவர் சிந்து பாஸ்கர், கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பின் நிறுவனர் மு.ராஜவேலு ஆகியோர் பேசினர். கருத்தரங்கில் கல்லூரி மாணவ, மாணவியர், பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

# வெளிநாட்டு அழைப்புகளை உள்ளூர் அழைப்புகளாக மாற்றி மோசடி: 2 பேர் கைது

**சென்னை மார்ச் 24-**
வெளிநாட்டு அழைப்புகளை உள்ளூர் அழைப்புகளாக மாற்றி மோசடி செய்த 2 பேரை போலீசார் கைது செய்தனர். சென்னை மயிலாப்பூரில் உள்ள ஏர்டெல் தொலைத் தொடர்பு அலுவலகத்தின் நோடல் அலுவலர் ஜெயகுமார் என்பவர் பல்லாவரம் போலீஸ் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்தார்.

அதில் அவர், "பல்லாவரம் பகுதியில் சட்டவிரோதமாக தங்கள் நிறுவனத்தின் தொலைத்தொடர்பை பயன்படுத்தி வருவாய் இழப்பு ஏற்படுத்தி வருவதாக" கூறி இருந்தார். மேலும் அவர்கள் கொடுத்த விவரங்களை வைத்து போலீசார் விசாரணை செய்தனர். விசாரணையில் பல்லாவரத்தில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் ஒருவர் தொழில் நுட்பத்தை சட்டவிரோதமாக பயன்படுத்தி வெளிநாட்டு அழைப்புகளை உள்ளூர் அழைப்புகளாக மாற்றி மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. அதேபோல் பெரும்பாக்கம் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு, தாழம்பூர் ஆகிய பகுதிகளில் தங்கி தொழில்நுட்ப சாதனைங்களை பயன்படுத்தி போலியாக சிம்கார்டை செயல்பட செய்து சட்டவிரோதமாக பயன்படுத்தி வருவாய் இழப்பை ஏற்படுத்தியது தெரியவந்தது.

இதையடுத்து பல்லாவரத்தில் தங்கி இருந்த கேரளாவை சேர்ந்த பாஹத் முகமது (வயது 25) மற்றும் சித்தாலபாக்கத்தில் தங்கியிருந்த சாஹல் (25) ஆகிய 2 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து கம்ப்யூட்டர், ரவுட்டர், 1200-க்கும் மேற்பட்ட சிம்கார்டுகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கடந்த 5 மாதங்களாக இன்ஸ்டாகிராம் மூலம் அறிமுகமான முகம் தெரியாத நபர் மூலம் இதனை கற்றுக்கொண்டு, வெளிநாட்டு அழைப்புகளை உள்ளூர் அழைப்புகளாக மாற்றி வந்துள்ளனர். மாதம் ரூ.15 ஆயிரம் சம்பளம், மற்ற வசதிகள் செய்து தருவதாக கூறிய தன்பேரில் அவர்களுக்காக சட்டவிரோத செயலில் ஈடுபட்டு வந்ததும் தெரியவந்தது. கைதான 2 பேர் மீதும் கூட்டுச்சதி உள்ளிட்ட நான்கு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த போலீசார், 2 பேரையும் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு திருத்தணியில் பசுமைத் தாயகம் சார்பாக உறுதிமொழி.



**திருத்தணி. மார்ச். 24**
தண்ணீரை சேமிப்போம் பாதுகாப்போம்என்று திருத்தணியில் பசுமை தாயகம் சார்பாக உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். வளர்ந்து வரும் நாகரிக உலகத்தில் இயற்கைஅன்னை நமக்கு இலவசமாக தந்த தண்ணீரை தற்போது வியாபாரமாகி மனிதர்கள் மட்டுமல்லாமல் விலங்கினங்கள் பிராணிகள் பறவைகள் மற்றும் தாவரங்கள் உள்ளிட்டவைகள் தண்ணீர் தட்டுப்பாட்டால் அழிந்து வருகிற நிலையில் உலக தண்ணீர் தினம் என்ற இந்த நாளில் தண்ணீரை வீணாக்காமல் பாதுகாப்போம் நீர் நிலைகளை ஆக்கிரமித்து வருபவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துவோம். உள்ளிட்ட உறுதி மொழியை பசுமை தாயகம் சார்பாக திருத்தணி ஆறுமுகம் சாமி கோயில் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.பாமக மாநில துணைத்தலைவர் டாக்டர் வைத்தியலிங்கம் ஆணைக்கிணங்க மாவட்ட செயலாளர் தினேஷ் குமார். மாவட்ட தலைவர் விஜயன். ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகர செயலாளர் சேகர் மாவட்ட இளைஞர் அணி துணைச் செயலாளர் சுரேஷ். நகர துணைத் தலைவர் நரசிம்மன். ஜெகநாதன். மற்றும் இளைஞர் அணி மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .



திருவள்ளூர்மாவட்டம்கூனிப்பாளையம்அரசினர்உயர்நிலைப்பள்ளிவளாகத்தில்செங்குன்றம் வனசரகம் சார்பாக உலக வன நாள் தினம் கொண்டாடப்பட்டது. பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சார் ஆட்சியர் எ.கேத்ரின் சரண்யா பரிசுகளை வழங்கினார். உடன் உதவி வன பாதுகாவலர் ஆர்.ராதை, வன சரக அலுவலர் கிளெமெண்ட் எடிசன், கூனிப்பாளையம் தலைமை ஆசிரியர் கோவிந்தராஜ் கலந்து கொண்டனர்.

# மத்திய சிவில் விமானத்துறை அமைச்சருக்கு டாக்டர் வீ.கலாநிதி எம்.பி. இரண்டாவது கடிதம்



**திருவொற்றியூர் மார்ச். 24**
வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய எம்.சிந்தியாவுக்கு விமான நிலையங்களில் புறப்படும் மற்றும் வருகை குறித்த அறிவிப்பு அல்லது முன் பதிவு செய்யப்பட்ட அறிவிப்பு இந்தி மற்றும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பிராந்திய மொழிகளில் விமான அறிவிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இரண்டாவது முறையாக கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் அவர் கூறியதாவது;

**கடிதம்**

3.11.2022 தேதியிட்ட எனது கடிதத்தின் குறிப்பு இதுவாகும், அதில் விமான நிலையங்களில் புறப்படும் மற்றும் வருகை குறித்த அறிவிப்பு அல்லது முன் பதிவு செய்யப்பட்ட அறிவிப்பு இந்தி மற்றும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பிராந்திய மொழிகளில் விமான அறிவிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். இந்தி அல்லது ஆங்கிலம் தெரியாத உள்ளூர் மக்களுக்கு இந்தி மற்றும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பிராந்திய மொழிகளில் அறிவிப்பு மிகவும் உதவியாக இருக்கும்.

4 மாதங்களுக்கு மேலாகியும், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால், இந்தக் கடிதத்தை மீண்டும் எழுத வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன். சென்னையில் இருந்து இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள பல தனியார் விமான நிறுவனங்களில் நான் பயணம் செய்துள்ளேன், அங்கு தமிழ் மொழியிலும் அறிவிப்புகள் வெளியிடப்படுவதை கவனித்துள்ளேன். தனியார் விமான நிறுவனங்கள் விமான நிலையங்களில் பிராந்திய மொழியில் அறிவிப்புகளை வெளியிடும் போது, இந்திய விமான நிறுவனங்களால் ஏன் முடியாது என்பது கவலைக்குரிய விஷயம்?

**அறிவுறுத்தல்**

இந்தியாவின் விமானப் பயணிகளின் பொதுவான கருத்துக்களில் ஒன்று-பெரும்பாலும் தென்னிந்தியாவிலிருந்து வரும் விமானங்கள் தங்கள் பிராந்திய மொழிகளில் விமானத்தில் அறிவிப்புகளை வெளியிடுவதில்லை.

ஏறக்குறைய அனைத்து அறிவிப்புகளும் ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே செய்யப்படுகின்றன, இது கன்னடம்/தமிழ்/மலையாளம் போன்ற மொழிகளை தாய் மொழியாக கொண்டுள்ள பல பயணிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது. அவர்களின் இந்தி/ஆங்கிலம் புரிதல் நன்றாக இல்லாவிட்டால், அறிவிக்கப்படுவதை அவர்களால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியாது. உண்மையான அவசரகாலத்தில் இது ஆபத்தாக முடியும்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, விமான நிலையம் மற்றும் விமானத்தில் அறிவிப்புக்கான ஏற்பாடுகளை விரைவில் இந்தி மற்றும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பிராந்திய மொழிகளில் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறு மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி கடிதம் எழுதியுள்ளார்.

# சென்னை லாட்ஜுகளில் அதிரடி வேட்டை: குற்றவாளிகளை அடையாளம் காட்டும் கேமரா மூலமாக 4123 பேரிடம் விசாரணை

**சென்னை மார்ச் 24-**
சென்னையில் குற்றச் செயல்களை தடுக்கவும் தலைமறைவாக உள்ள பழைய குற்றவாளிகளை வேட்டையாடி கைது செய்யவும் போலீசார் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதன் ஒரு பகுதியாக கமிஷனர் சங்கர் ஜிவால் உத்தரவின் பேரில் அவ்வப்போது லாட்ஜில் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னை மாநகரம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு போலீசார் லாட்ஜுகள், தங்கும் விடுதிகளில் சோதனை நடத்தினர். 377 லாட்ஜுகள் மற்றும் 100 மேன்சன்களில் போலீசார் சோதனை நடத்தினர். இதில் சந்தேகத்துக்கிடமாக யாராவது தங்கி இருக்கிறார்களா? என்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டது. லாட்ஜுகளில் தங்கி இருப்பவர்கள் எதற்காக அறை எடுத்து உள்ளனர்? அவர்களது முகவரி சரியானது தானா? என்பதை எல்லாம் போலீசார் ஆய்வு செய்தனர். இது தொடர்பாக லாட்ஜ் உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. பழைய குற்றவாளிகளின் முகத்தை அடையாளம் காட்டும் கேமராவையும் போலீசார் பயன்படுத்தினர்.

**விசாரணை**

இதில் 4123 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் 4 பழைய குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டனர். பிடிபட்ட இந்த குற்றவாளிகள் போலீசாரின் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

லாட்ஜுகளில் தங்கி இருப்பவர்கள் ஆயுதங்கள், போதை பொருட்களை பதுக்கி வைத்துள்ளார்களா? என்றும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் அல்லது பொருட்கள் குறித்து தகவல் அறிந்தால் உடனே காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், உரிய அடையாள சான்று இல்லாத நபர்களுக்கு அறைகள் கொடுக்க வேண்டாம் எனவும் லாட்ஜ் உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

லாட்ஜுகளில் சோதனை நடத்தப்பட்ட அதே நேரத்தில் வாகன சோதனையும் தீவிரமாக நடைபெற்றது. சென்னை மாநகரம் முழுவதும் 7195 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் மது போதையில் வாகனங்களை ஓட்டியதாக மொத்தம் 60 பேர் பிடிபட்டனர். இது தவிர விதிமீறல் வாகனங்களும் சிக்கின. மொத்தம் 142 வாகனங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. 517 வாகனங்களின் பதிவு எண்கள் சரிபார்க்கப்பட்டதில் முறைகேடாக இயங்கிய 3 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. போலீசாரின் இந்த வேட்டை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஓய்வுபெற்ற இன்ஸ்பெக்டரின் மனைவியை கட்டிப்போட்டு நகை-பணம் கொள்ளையடித்த வழக்கில் மேலும் 4 பேர் கைது

**சென்னை மார்ச் 24-**
ஓய்வுபெற்ற இன்ஸ்பெக்டரின் மனைவியை கட்டிப்போட்டு நகை, பணம் கொள்ளையடித்த வழக்கில் மேலும் 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

சென்னை அரும்பாக்கம், அம்பேத்கர் தெருவில் உள்ள வீட்டில் தனியாக வசித்து வருபவர் கங்கா (வயது 70). ஓய்வு பெற்ற இன்ஸ்பெக்டரின் மனைவியான இவரது வீட்டுக்குள் புகுந்த மர்மநபர்கள், கங்காவை கத்தியால் வெட்டியதுடன் அவரது கை, கால்களை கட்டிப்போட்டுவிட்டு, 40 பவுன் நகை, ரூ.60 ஆயிரத்தை கொள்ளையடித்தனர். மேலும் அவரை நிர்வாணமாக படம் எடுத்து மிரட்டிச் சென்று விட்டனர். இது குறித்து அரும்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குறித்து கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை வைத்து விசாரித்தனர். அதில் இந்த கொள்ளை சம்பவத்துக்கு மூளையாக செயல்பட்டது கங்காவின் மகன் மகாதேவன் நடத்தி வரும் நிறுவனத்தில் பணிபுரிந்த அரும்பாக்கத்தைச் சேர்ந்த மணிகண்டன்(38) என்பது தெரியவந்தது. அவரை போலீசார் கைது செய்தனர். இந்தநிலையில் மணிகண்டன் அளித்த தகவலின்பேரில் இந்த கொள்ளையில் ஈடுபட்ட பல்லாவரத்தை சேர்ந்த துரைப்பாண்டி (41), கீழ்கட்டளையை சேர்ந்த துரைசிங்கம் (35), ரமேஷ் (31), பல்லாவரத்தை சேர்ந்த மணிகண்டன் (38) ஆகிய மேலும் 4 பேரை போலீசார் கைது செய்து விசாரணை செய்தனர். கங்காவின் மகன் மகாதேவன் தனியாக தொழில் செய்து வந்தார். அவரிடம் மணிகண்டன் மாதம் ரூ.15 ஆயிரம் சம்பளத்துக்கு வேலை செய்து வந்தார். மாதந்தோறும் பேசியபடி மணிகண்டனுக்கு மகாதேவன் முறையாக சம்பளம் கொடுக்காமல் இருந்து வந்தார். சம்பவத்தன்று தனது நண்பர்களுடன் மது அருந்தி கொண்டிருந்த மணிகண்டன், இதுபற்றி தனது நண்பர்களிடம் கூறினார். இதையடுத்து குடிபோதையில் இருந்த 5 பேரும் கங்கா வீட்டுக்குள் புகுந்து தனியாக இருந்த அவரை கட்டிப்போட்டு நகை, பணத்தை கொள்ளையடித்து சென்றது தெரிந்தது. அவர்களிடம் இருந்து நகை, பணம் ஆகியவற்றை அரும்பாக்கம் போலீசார் பறிமுதல் செய்தனர். அதில் கவரிங் நகைகளும் அதிக அளவில் இருந்தது. கைதான 5 பேரிடமும் போலீசார் மேலும் விசாரித்து வருகின்றனர்.

**கண், ரத்த தானம் செய்வீர்**

# சென்னையில் ஜி20 மாநாடு கருத்தரங்கம்: வெளிநாட்டு பிரதிநிதிகள் தங்கும் பகுதிகளில் டிரோன் பறக்க தடை

**சென்னை மார்ச் 24-**
சென்னையில் 'ஜி20' மாநாடு கருத்தரங்கில் பங்கு பெற உள்ள வெளிநாட்டு பிரதிநிதிகள் தங்கும் பகுதிகளில் 'டிரோன்' பறக்க போலீசார் தடை விதித்துள்ளனர். இந்தியாவில் 'ஜி20' மாநாடு வருகிற அக்டோபர் மாதம் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் சென்னை 2-வது கட்ட கருத்தரங்கு நிகழ்ச்சி இன்று (வெள்ளிக்கிழமை), நாளை (சனிக்கிழமை) ஆகிய 2 நாட்கள் சென்னை கிண்டியில் உள்ள ஐ.டி.சி.கிராண்ட் சோழா ஓட்டலில் நடைபெற உள்ளது. இதில் 29 வெளிநாடுகள், 15 பன்னாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். இவர்கள் கருத்தரங்கு நடைபெறும் ஓட்டல், ரமடா பிளாசா, ஓட்டல் ஹபீஸ், ஓட்டல் பார்க் ஹையாத் ஆகிய ஓட்டல்களில் தங்குகின்றனர். எனவே 25-ந் தேதி வரையில் இவர்கள் தங்கி உள்ள ஓட்டல்கள், கருத்தரங்கு நடைபெறும் ஓட்டல் மற்றும் இவர்கள் செல்லும் வழித்தடங்களை சிவப்பு மண்டலமாக சென்னை போலீசார் அறிவித்துள்ளனர். இந்த பகுதிகளில் டிரோன்கள், இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறப்பதற்கு போலீசார் தடை விதித்துள்ளனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**IN THE COURT OF HONORABLE DISTRICT COURT OF NILGIRIS AT UTHACAMUND, NILGIRIS**
**S.O.P. No.8/2023**
**(On the matter of the Estate of the deceased Peter Xavier)**

1. Tmt.Marykutty.T.K, aged 77 years, wife of Peter Xavier
2. Thiru.Benny.K.P, aged 48 years, son of Peter Xavier
3. Thiru.Buex @ Buex Peter, aged 45 years, son of Peter Xavier, All are residing at Door No. 4/51, Kattunkathayil house, Kayyunni post, Pandalur taluk, Nilgiris.
4. Tmt.Blitzy.K.P, aged 47, daughter of Peter Xavier, W/o.Biju Joseph, Nellikunnel house, Nadavayal Post, Nadavayal, Panamaram, Wayanad district, Kerala 670721 ....Petitioners

Versus

M/s.Nestle India Limited
M-5A,Connaught Circus, New Delhi-110001
Represented by its Manager, Investor Relations. ....Respondent.

**GENERAL NOTICE**

Please take notice by all concerned that the above petitioners has filed a petition under section 372 of Indian Succession Act 1925 for succession certificate to the estate of the deceased Peter Xavior in respect of the debts and security mentioned in the schedule annexed and the said petition is posted to 06-04-2023 for objections if any. In default of appearance and objections the petition will be heard ex-parte and proceeded on merits.

**SCHEDULE**

| S No | Share Certificate Nos | Distinctive Nos | No of shares |
|---|---|---|---|
| 1 | 334830 | 25902167-25902216 | 50 |
| 2 | 555209 | | 12 |
| 3 | 745422 | | 31 |
| | | Total | 93 shares |

/by order of the court/
SHINU VARGHESE. BSC, LLB., Advocates for the petitioner
Behind Municipal complex, Pandalur, Nilgiris. MoB: 9443523835

அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் வகையறா திருக்கோயில்கள்
பெருமாநல்லூர் அவிநாசி வட்டம், திருப்பூர் மாவட்டம்.

**மறு பொது ஏலம் / டெண்டர் அறிவிப்பு**

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், பெருமாநல்லூர் கிராமம் அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயிலின் கீழ்கண்ட பணிகளுக்கு மறு டெண்டர் எதிர்வரும் 11.04.2023 அன்று மதியம் 12.30 மணியளவில் டெண்டர்கள் வரபெற்றும் மதியம் 01.00 மணியளவில் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் முன்னிலையில் திருக்கோயில் அலுவலகத்தில் செயல் அலுவலரால் திறக்கப்படும்.

| வ. எண் | திருக்கோயில் வேலை விபரம் | மதிப்பீடு தொகை | டெண்டர் முடிக்க வேண்டிய காலம் | வைப்புத் தொகை | ஷெட்யூல் ஒன்றின் விலை |
|---|---|---|---|---|---|
| 1 | இரும்பு கேட் அமைக்கும் பணி | ரூ. 3,60,000/- | 30 நாட்கள் | ரூ. 3600/- | ரூ. 885/- வரிகள் உட்பட |
| 2 | கழிவு நீர் சேகரிக்கும் தொட்டி கட்டும் பணி | ரூ. 5,75,000/- | 60 நாட்கள் | ரூ. 5750/- | ரூ. 1770/- வரிகள் உட்பட |

ஒப்பந்தப்புள்ளி படிவம் 10.04.2023 மாலை 5.45 மணிவரை திருக்கோயில் அலுவலகத்தில் வழங்கப்படும். இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்

(ஒம்) க.காளிமுத்து
செயல் அலுவலர்

(ஒம்) கி.பெரியமருதுபாண்டியன்
தக்கார்

இடம்: பெருமாநல்லூர், திருப்பூர். நாள்: 23.03.2023

வெ.ஆ.எண். 112/செ.ம.தொ.அ/ஒப்பந்தப்புள்ளி/2023. திருப்பூர். நாள் : 23.03.2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்" "சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

